DEPOSITION OF WITNESSES

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.1 SRIVAIKUNDAM

| | |
|---|---|
| Case No | CC. 14 / 2017 |
| Depostition of witness for | Prosecution wit. PW. 4 |
| Name | திரு. லெட்சுமணன் |
| Father Name | இசக்கிதேவர் |
| Village | வல்லகுளம் |
| Taluk | |
| caste | |
| calling | |
| Religion | |
| Age | 75 |

**(1, 3 எதிரிகள் ஆஜர் - 2 ஆம் எதிரி ஆஜரில்லை: 2 ஆம் எதிரிதரப்பில் கு.வி.மு.ச பிரிவு 317(2)ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்))**

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 the 07-11-2025.(நேரம்: 03.15PM )

**முதல்விசாரணை**

1. நான் வல்லகுளத்தில் குடியிருந்து வருகிறேன்.

2. நான் விவசாய வேலை செய்து வருகிறேன்

3.இவ்வழக்கின் 2 ஆம் எதிரியையும் , ஆஜர் 1,3 எதிரிகளையும் எனக்கு தெரியும்.

4. அசா 1,2 ஆகியோர்களை எனக்கு தெரியும்.

5. கடந்த 29.11.2016 ஆம் தேதி பகல் 01.30 மணியளவில் நான் வல்லகுளத்தில் உள்ள வடிவேல் தோட்டத்தின் அருகில் எனக்கு தோட்டம் உள்ளது.

6. நான் வடிவேல் தோட்டம் பக்கம் நின்றுக்கொண்டிருக்கும்போது தாருமாறாக சத்தம் கேட்டது. அப்போது அசா 1 பேச்சியம்மாளை இவ்வழக்கின் ஆஜர் 1,2 எதிரிகள் மற்றும் எதிரி பட்டுகனி ஆகியோர்கள் சேர்ந்து அசா 1 ஐ " தேவடியா " என்று தகாத வார்த்தையால் அசிங்கமாக பேசினார்கள் .

7. பின்பு அசா 1 ஐ இவ்வழக்கின் எதிரி பாலசுந்தரம் முதுகில் குத்தினார். பின்பு இவ்வழக்கின் மற்ற எதிரிகள் கீழே தள்ளி காலால் மிதித்தார்கள்.

8.பின்பு நான் சத்தம்போட்டு சண்டையை விலக்கி விட்டேன். சிகிச்சைக்காக ஆட்டோவில் திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சேர்த்தேன்

9.மேற்படி சம்பவம் நான் எனது தோட்டத்தின் அருகில் நின்றதால் எனக்கு தெரியும்,

10.சாட்சி திறந்த நீதிமன்றத்தில் ஆஜர் 1,3 எதிரிகளை அடையாளம் காட்டினார். 2 ஆம் எதிரி இன்று நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை. பார்த்தால் என்னால் அடையாளம் காட்டமுடியும் என்று கூறினார்.

11. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை (நேரம் 03.24PM)**

1.வழக்கில் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் வழக்கின் இடமானது புகார்தாரரின் தகப்பனார் பேரிலும் இந்த வழக்கில் 2 வது எதிரியான பட்டுகனி அவர்களின் கணவரான காலஞ் என்ற வடிவேல் என்பவர் பேரில் தான் உள்ளது என்று சொன்னால் சரிதான்.

2.இடம் சம்மந்தமாக புகார்தாரருக்கும், எதிரிகளுக்கும் இடையே தகராறு இருந்தது பற்றி தெரியுமா என்றால் தெரியும்.

3.வழக்கின் புகார்தாரர் பேச்சியம்மாள் என்னுடைய வயலில் வேலைபார்த்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல.

4.எதிரிகளும். நானும் வெவ்வேறு சமூகத்தை சேர்ந்தவர்கள் என்று சொன்னால் சரிதான்.

5.சம்பவம் நடைபெற்றதாக சொல்லக்கூடிய இடமானது வல்லகுளம் கிராமத்திற்கு மேல்புறம் அமைந்துள்ளது என்று சொன்னால் சரியல்ல.

6.சம்பவத்தின் போது எதிரி பாலசுந்தரம் புகார்தாரரை கீழே தள்ளி முதுகில் குத்தியதாக போலிஸ் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன்.

அவ்வாறு குத்தியது வலது புறமா அல்லது இடது புறமா என்றால் எந்த பக்கம் என்று கூறவில்லை. முதுகில் குத்தியதாக சாட்சி கூறுகிறார்.

7.சம்பவத்தின் போது கேட்ட சத்தத்தை கேட்டு எதிரி பாலசுந்தரம் புகார்தாரரை கீழே தள்ளியுள்ளார் என்றும், புகார்தாரர் சேலையில் சேரு, சகதி இருக்கிறதா என்றால் இருக்கிறது.

8.நான் ஊரில் நிர்வாக பொறுப்பில் உள்ளேனா என்றால் உள்ளேன்.

9.சம்பவத்தின்போது காயம்ப்பட்டவர்களை எந்த மருத்துவமனைக்கு அனுப்பினேன் என்றால் திருநெல்வேலி மருத்துவமனைக்கு ஆட்டோவில் அனுப்பினேன்.

10.சம்பவத்தின் போது மருத்துவமனைக்கு நான் ஏன் காயம்ப்பட்ட நபருடன் செல்லவில்லை என்று கேட்டால் அசா 1 ன் கணவருக்கு போன் மூலமாக சம்பவம் தொடர்பாக தெரிவித்ததினால் நான் அசா 1 னுடன் மருத்துவமனைக்கு செல்லவில்லை.

11.வழக்கின் புகார்தாரருக்கும், எதிரிகளுக்கும் இடதகராறு இருந்து வருவதால் இவ்வழக்கின் புகார்தாரர் எனது இடத்தில் உளவு பார்க்கிறார் என்று சொன்னால் சரியல்ல. அத்துடன் சம்பவ இடத்தில் நான் இல்லை என்றும் அவ்வாறு இருந்திருந்ததால் பாதிக்கப்பட்டவரை மருத்துவமனைக்கு உடன் அழைத்து சென்று சிகிச்சையில் சேர்த்திருப்போன் என்று சொன்னால் சரியல்ல.

**சாட்சியம் முடிந்த நேரம்** : 03.40PM

//சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில்சாட்சி சொல்ல, சொல்ல என்னால் தட்டச்சருக்குசொல்லப்பட்டு, அவரால் கனிணியில் பதிவு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு ஒப்புக்கொண்டு கையெழுத்து பெறப்பட்டது. //

(ஒ/ம்)G.ராமசங்கரன்
நீதித்துறை நடுவர் எண். 1(மு.பொ)
ஸ்ரீவைகுண்டம்.

DEPOSITION OF WITNESSES

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.1 SRIVAIKUNDAM

| | |
|---|---|
| Case No | CC.14/2017 |
| Depostition of witness for | Prosecution wit. PW.5 |
| Name | திரு. இசக்கிபாண்டி |
| Father Name | மூக்கதேவர் |
| Village | வல்லகுளம் |
| Taluk | |
| caste | |
| calling | |
| Religion | |
| Age | 55 |

**(1, 3 எதிரிகள் ஆஜர் - 2 ஆம் எதிரி ஆஜரில்லை: 2 ஆம் எதிரிதரப்பில் கு.வி.மு.ச பிரிவு 317(2)ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்))**

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 the 07-11-2025.(நேரம்: )

**முதல்விசாரணை**

1.நான் தற்போது வல்லகுளத்தில் குடியிருந்து வருகிறேன்.

2 நான் கூலி வேலை செய்து வருகிறன்.

3.என்னிடம் காட்டடப்படும் பார்வைமகஜரில் உள்ள இசக்கிபாண்டி என்ற கையெழுத்து என்னுடையது தான்.

4.கடந்த 2016 ஆம் ஆண்டு இவ்வழக்கு நடந்த சம்பவத்திற்கு மறுநாள் சேரக்குளம் போலிசார் வல்லகுளம் அம்பேத்கார் நகரில் உள்ள கிணற்றிக்கு அருகில் வைத்து வரைபடம் வரைந்தார்கள். **அந்த பார்வைமகஜர் அசாஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

5. பின்பு நான் அதில் சாட்சியாக கையெழுத்து செய்தேன்.

6.வழக்கு சம்மந்தமாக வேறு எதுவும் தெரியாது.

7. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை (நேரம் 03.42PM)**

1.சம்பவத்திற்கு மறுநாள் நான் சம்பவ இடத்தில் வரைபடம் வரைந்து என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள் என்று சொன்னால் சரிதான்.

2.நானும் , வழக்கின் எதிரியும் வெவ்வேறு சமூகத்தை சேர்ந்தவர்கள் என்று சொன்னால் சரிதான்.

3.சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம், வயல்காடு ஆகியவை எதிரிகளுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான்.

4.சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் என்பது வல்லகுளம் அம்பேத்கர் காலனிக்கு மேற்குபுறம் என்றால் சரிதான்.

5.போலிசார் என்னிடம் வரைபடம் வரைந்து கையொப்பம் செய்தார்கள் என்றால் சரிதான்.

6.காவல் நிலையத்தில் வைத்து போலிசார் கையொப்பம் வாங்கினார்கள் என்றால் கிணற்று பக்கம் வைத்து கையொப்பம் செய்தேன்.

7. 4,5 பக்கங்களுக்கு என்னிடம் கையெழுத்து வாங்கினார்களா என்றால் 1 பக்கத்தில் தான் கையொப்பம் வாங்கினார்கள்.

**சாட்சியம் முடிந்த நேரம்** : 03.45PM

//சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில்சாட்சி சொல்ல, சொல்ல என்னால் தட்டச்சருக்குசொல்லப்பட்டு, அவரால் கனிணியில் பதிவு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு ஒப்புக்கொண்டு கையெழுத்து பெறப்பட்டது. //

(ஒ/ம்)G.ராமசங்கரன்

நீதித்துறை நடுவர் எண். 1(மு.பொ)

ஸ்ரீவைகுண்டம்.